பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 18 புதன்கிழமை 01.06.2022 கதிர் 208

**இது ரகசியம் அல்ல!**

'தென்னையில் தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டிய மாதிரி' என்பார்கள். அப்படி ஒரு நிலைமை, துமிந்த சில்வா தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றம் கொடுத்த அதிரடி உத்தரவால் பலருக்கு. அவர்களுக்கு அந்த இடைக்கால உத்தரவு ☞2

# துமிந்தவின் மன்னிப்பை இடைநிறுத்தியது மன்று

## உடன் கைது செய்து சிறையில் அடைக்க உயர்நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை



கொழும்பு, ஜுன் 01

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவிற்கு, ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை நேற்று பிறப்பித்தது.

இதன்படி, துமிந்த சில்வாவை உடன் கைது செய்து, மீண்டும் மரண தண்டனைக் கைதியாகச் சிறையில் வைக்குமாறு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ☞2

## சிறுமி ஆயிஷாவுக்கு நீதி கோரி யாழிலும் நேற்றுக் கவனவீர்ப்பு




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜுன் 01

அட்டுலுகமவில் படுகொலை செய்யப்பட்ட சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி யாழ்நகரிலும் ☞2

## வவுனியாவிலும் பெண்கள் கவனவீர்ப்புப் போராட்டம்




அட்டுலுகமவை சேர்ந்த 9 வயதான சிறுமியான ஆயிஷாவின் மரணத்துக்கு நீதிகோரி வவுனியாவில் பெண்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ☞2

## படைத் தளபதிகள் மட்டத்தில் இன்று முதல் பதவி மாற்றங்கள்



இதுவரை இராணுவத் தள பதியாக இருந்த ஜெனரல் சவேந்திர சில்வா இன்று முதல் பாதுகாப்புப் படைகளின் பிர தானியாக ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ ☞2

## முதியவரின் பாணைப் பிடுங்கிய மோ.சைக்கிள் இளைஞர்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன். 01

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் நேற்றைய தினம் இரண்டு இறாத்தல் பாணை சைக்கிளில் கொண்டு சென்ற முதியவரிடம் இருந்து அந்தப் பாணை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

கோண்டாவில் சந்திக்கு வந்து இரண்டு இறாத்தல் பாண் வாக்கிகொண்டு ☞12

## வரி உயர்வு பற்றி அறிவிப்பு விலைகளும் மீளவும் எகிறும்

வரிச் சட்டங்கள் பலவற்றை திருத்துவதற்குத் தேவையான யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, பெறுமதி சேர் வரி (வற்) 8 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாகவும், தொலைத் தொடர்பு வரி 11.25 சதவீதத்திலிருந்து ☞12

## மஹிந்தவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குவது தம் அரசியல் வாழ்வில் மிகக் கடினமான முடிவாம்

### இப்படி விசனப்படுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ



மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குவதற்குத் தாம் எடுத்த தீர்மானான் தனது அரசியல் வாழ்க்கையில் எடுத்த கடினமான முடிவாகுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டம் நேற்று முன்இனம் முன்னிரவு நடைபெற்றது. அதிலேயே ☞12

## அடாது காற்றடித்தும் விடாது போராட்டம்!



நேற்று அதிகாலை முதல் கொழும்பின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை ☞2

## யாழ்ப்பாணம் நகைக் கடைகளில் ஆட்டையைப் போட்ட கில்லாடிகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 1

யாழ். நகரில் உள்ள இரு பிரபல நகைக் கடைகளில் பட்டப்பகலில் உரிமையாளர்களை ஏமாற்றி நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு நகைக் கடையில் இரு இளைஞர்கள் மோதிரம் கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்து வடிவங்களை பார்வையிட்ட சமயம் உரிமையாளர் ஓர் தட்டில் இருந்த அனைத்து மோதிரங்களையும் எடுத்து காண்பித்துள்ளார். இதன்போது அதில் உள்ள வடிவங்கள் திருப்தி இல்லை என இளைஞர்கள் கூறியமையினால் கடையின் உள்ளே வேறு சில மோதிரம் இருக்கின்றன எனவும் அவற்றை எடுத்து ☞12

## பண வீக்கம் உச்சம்

இலங்கையின் வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் 2022 மே மாதம் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் 39.1% ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குலைப் பன் காய்ச்சலை அடிக்கச் செய்திருக்கிறது.

அவர்களில் ஒருவர் ஞானசார தேரர். மற்றவர் மிருசுவில் கொடூரக் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் விசேட பொது மன்னிப்புப் பெற்று வெளியே வந்த இராணுவ ஸ்டாவ் சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்க.

இருவரும் பயந்து நடுங்குவதற்குக் காரணங்கள் உண்டு

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வழங்கப்பட்ட நான்கு விடுதலைகள் தொடர்பான விவகாரம் உயர்நீதிமன்றத் திற்கு போயிருக்கின்றது. அவற்றில் இரண்டு மன்னிப்புகள் மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்டவை. மற்ற இரண்டும் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியவை.

கொழும்பு ரோயல் பார்க்கில் தனது காதலியைக் கொன்றமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜயமஹா என்ற இளைஞருக்கு, தாம் பதவியை விட்டு விலகும் கடைசி வாரத்தில் பொதுமன்னிப்பு அளித்து விடுவித்தார் மைத்திரியார். ஜயமஹா கோடீஸ்வரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். விடுதலை வாய்ப்புக் கிடைத்ததும் வெளிநாட்டுக்குப் பறந்து விட்டார்.

அதேபோல நீதிமன்ற அவமதிப்புக் காக இரண்டு வழக்குகளை எதிர் கொண்டவர் ஞானசார தேரர். அவற்றில் ஒன்றில் 6 வருடச் சிறை தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரரை நேரத்துடன் பொது மன்னிப்பு வழங்கி விடுவித்தார் மைத்திரி.

ஞானசார தேரருக்கு எதிரான மற்றைய நீதிமன்ற அவமதிப்பு வழக்கு – முல்லைத்தீவில் நீதிவான் நீதிமன்ற உத்தரவை மீறி இந்து ஆலயப் பிகாரத்தில் பிக்குவின் உடலை எரித்த விவகாரம் – இன்னும் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் இருக்கின்றது.

அடுத்தது – மிருசுவில் கொடூரக் கொலை வழக்கில் மரண தண்டனை பெற்ற சுனில் ரத்நாயக்கவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கிய விடயம்.

இந்த நான்கு பொதுமன்னிப்புகள் தொடர்பாகவும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் போடப்பட்டன. ஜயமஹா தவிர்ந்த மற்றைய மூன்று வழக்குகளிலும், பொது மன்னிப்பு விடுதலையை ஆட்சேபிக்கின்ற மனுதாரர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனே முன்னிலையாகி வாதாடுகின்றார்.

இந்த நான்கிலும் காலத்தால் பிந்தியது துமிந்த சில்வாவின் வழக்கு. ஆனால் மற்றைய மூன்று வழக்குகளும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன, அவற்றை விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்து உயர்நீதிமன்றம் இன்னும் முடிவு செய்யவில்லை.

காலத்தால் பிந்திய துமிந்த சில்வாவின் வழக்கில் அந்த வழக்கை முதலில் விசாரணைக்கு ஏற்கும் Leave to Procee- முடிவு எடுக்கப்பட்டதுமே மேற்படி இடைக்கால தடை உத்தரவை உயர் நீதிமன்றம் வழங்கிவிட்டது – அதாவது, பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டவரை முதலில் கைது செய்து சிறைக்குள் வைத்துக்கொண்டு, பின்னர் விசாரணையைத் தொடரும் உத்தரவு.

ஞானசார தேரர், இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஆகியோரின் வழக்குகளும் அடுத்த தடவை உயர்நீதிமன்றத்தில் எடுக்கப்படும்போது Leave to Proceed வழங்கப்படக் கூடிய வாய்ப்பு உண்டு. அப்படி அனுமதித்தால் இப்போது துமிந்த சில்வாவுக்கு எதிரான வழக்கின் உத்தரவை முன்மாதிரியாக காட்டி அதே போன்று இடைக்கால உத்தரவைக் கட்டளையாகப் பெறுவது இலகுவானதும் சாத்தியமானதுமாகும் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில், ஞானசார தேரர், சுனில் ரத்நாயக்க ஆகியோருக்கு குலைப்பன் காய்ச்சல் அடிக்கும் என நான் கூறியமையின் அர்த்தம் வாசகர்களுக்குப் புரியும்.

இதற்கிடையில் –

ஞானசார தேரருக்கு நேற்று மற்றொரு பேரிடி விழுந்து இருக்கின்றது. அது நேற்றுக் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

2014 ஆம் ஆண்டில் ஞானசார தேரர் கட்டுமட்டில்லாமல் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு ஒன்று தொடர்பானது.

புனித குர்ஆனை அவமதித்து, ஊடகங்களில் வெளிப்படையாக கருத்து வெளியிட்டார் ஞானசாரர் என்று அப்போது கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஞானசார தேரருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பான வழக்கு நீண்ட காலம் இழுபட்டு, நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இவ்விடயத்தில் மதஉணர்வுகளைப் புண்படுத்தும் வார்த்தைகளைப் பிரயோகித்தமை தொடர்பாக, குற்றவியல் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை ஞானசார தேரர் மீது சுமத்துமாறு சட்டமா அதிபர் தங்களுக்கு வழிகாட்டுதல் வழங்கி இருக்கின்றார் என்று பொலிஸார் மன்றில் தெரிவித்துள்ளனர்.

அதன்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து சமர்ப்பிப்பதற்கு நவம்பர் 14ஆம் திகதியைக் குறித்துள்ளார் நீதிவான்.

அத்தகைய குற்றச்சாட்டு சுமத்தப்படுமானால், இத்தகைய விடயங்களை ஒட்டி இலங்கை ஒப்பமிட்டுள்ள சர்வதேசப் பட்டயங்களின்படி, சட்டத்தின் பிரகாரம், இன, மத குழுமங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தும் சந்தேகநபர்கள் பிணை வழங்கப்பட முடியாத விளக்கமறியலில் வைக்கப்படுவது தவிர்க்க முடியாதாகும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்து போது வழங்கிய பொது மன்னிப்பில் வெளியே வந்துள்ள ஞானசார தேரர், அதே வழக்குக்காக திரும்பவும் கம்பி எண்ணும் சாத்தியத்தை நேற்று துமிந்த சில்வா வழக்கில் உயர் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால உத்தரவு ஏற்படுத்துகின்றது.

அதில் தப்பினால், அடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரிசையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவருக்குக் காத்து நிற்கின்றது.

அதிலும் தப்பினால், அல்லது அவை தாமதமானால், நவம்பர் 14ஆம் திகதி கையளிக்கப்படக் கூடிய குற்றப்பத்திரம் குறைந்தபட்சம் விளக்கமறியல் சிறைச்சாலையிலாவது நீண்டகாலம் அவரைத் தள்ளிவிடும்.

எப்படிப் பார்த்தாலும், அவருக்கு இது போதாத காலம்தான் போலும். அவர் வகித்த 'ஒரே நாடு; ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் பதவியும் அந்தச் செயலணி இரண்டு நாள்களுக்கு முன்னர் காலாவதியாகி விட்டமையால், அந்தப் பதவிப் பவிசும் கைவிட்டுப் போய் விட்டது. அவர் நிலைமை பெரும்பாலும் பரிதாபமாகவே இருக்கலாம்.

அதிகம் துள்ளிக்குதித்து, அதிகம் சண்டித்தனம் பண்ணி, அதிக அட்டகாசம் செய்வது எப்போதும் கூடாதவைதான்.

பொது மன்னிப்பில் வெளியே வந்த துமிந்த சில்வாவை மீண்டும் கம்பி எண்ண வைப்பதற்கு சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் அணி நடத்திய போராட்டத்திலும் சுவையான – அறிய வேண்டிய – பல அம்சங்கள் உள்ளன.

உயர் நீதிமன்றத்தின் நேற்றைய அந்த இடைக்கால உத்தரவும் கூட மிக ஆழமான அர்த்தங்கள் கொண்டதுதான். பாஸ்போர்ட்டை நீதிமன்றம் தடுத்து வைத்திருப்பது (Impounding) என்பதே உள்ளார்த்தங்கள் பொதிந்த பல விடயங்களை கொண்டதுதான். அவை எல்லாம் பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.

– மின்னல் –

## துமிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ள உயர் நீதிமன்றம், அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் உதவிகளை வழங்குமாறு சட்டமா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளது.

மேலும் துமிந்த சில்வாவுக்கு வெளிநாட்டுப் பயண தடையும் விதித்த நீதிமன்றம், அவரது கடவுச் சீட்டை நீதிமன்றத்தில் தடுத்து வைக்கவும் உத்தரவிட்டுள்ளது.

ஹிருணிகா பிரேமச்சந்திர, அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி ஹுசைன் ஆகியோர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பைச் சவாலுக்கு உட்படுத்தி மூன்று அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அவற்றை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்றம் நேற்றுப் பூர்வாங்க விசாரணையின் பின்னர் மனுதாரர்கள் தரப்பு வாதங்களை ஏற்று இந்த இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியது.

நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த மூன்று அடிப்படை உரிமை மனுக்களை விசாரிப்பதற்கு அனுமதி வழங்கி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி சுரேஷ் பெர்னாண்டோவின் அனுசரணையுடன் ஆஜராகி பிரதான வாதங்களை முன்வைத்தார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் துணைவியார் சுமனா பிரேமச்சந்திர சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது இராஜ் டி சில்வா முன்னிலையாகி வாதிட்டார்.

இதேசமயம் மூன்றாவது அடிப்படை உரிமை மீறல் மனுவின் மனுதாரர் சார்பில் ஜெவ்ரி அழகரட்ணம் முன்னிலையாகி வாதங்களைச் சமர்ப்பித்தார்.

மனுதாரர்கள் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தையும் எதிர்மனுதாரர் தரப்பாகக் குறிப்பிட்ட சூழ்நிலையில், சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் முன்னிலையாகி தமது தரப்பு வாதங்களை முன் வைத்தார்.

துமிந்த சில்வா சார்பில் காமினி மாரப்பான முன்னிலையாகி வாதிட்டார்.

அரசுத் தரப்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே முன்னிலையாகி சமர்ப்பணம் செய்தார்.

துமிந்த சில்வா கடந்த மாதம் வெளிநாடு சென்றிருந்தார். அவர் நாடு திரும்பி விட்டாரா, இலங்கையில் இருக்கின்றாரா என்பவை இன்னமும் உறுதி செய்யப்பட வில்லை.

## அடாது காற்றடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலவி வருகிறது.

இந்த நிலையில் காலிமுகத்திடல் பகுதியில் பலத்த காற்று காரணமாக 'கோட்டா கோ கம' பகுதியில் போராட்டக்காரர்களின் கூடாரங்கள் தூக்கி எறியப்பட்டு சேதமடைந்துள்ளன.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## பணம் வீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக பதிவாகியுள்ளது. இது ஏப்ரலில் 29.8 வீதமாக இருந்தது.

மேலும், உணவுப் பணவீக்க விகிதம் மேயில் 57.4 சதவீதமாக அதிகரித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், உணவு அல்லாத பணவீக்கம் 30.6 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## சிறுமி ஆயிஷாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

வடக்குக் கிழக்கு பெண்கள் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 10 மணியளவில் ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரி கோஷங்களை எழுப்பினர்.

வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் ஆயிஷாவிற்கு நீதி கோரி பல இடங்களில் இத்தகைய போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா புதிய பஸ் நிலையம் முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுப் பகல் இடம்பெற்றது.

பல்வேறு சுலோக அட்டைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

## படைத் தளபதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனக் கடிதம் நேற்று ஜனாதிபதியினால்வருக்கு அவவழங்கப்பட்டது.

இதேவேளை இலங்கையின் 24 ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகேவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்து அதற்கான நியமனக் கடிதத்தை நேற்று வழங்கினார்.

அதன்படி லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றுள்ள விக்கும் லியனகே இன்று புதன்கிழமை தனது புதிய பதவியை பொறுப்பேற்கிறார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பண்பாட்டுப் படுகொலை நாள்

**இலங்கைத் தீவு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற காலம் தொட்டு, தொடர்ந்து அதிகாரத்தில் இருந்த பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடங்கள், சிறுபான்மையினரை – குறிப்பாகத் தமிழரை – இந்தத் தீவில் மூன்றாம் தரப் பிரஜைகளாக்கும் வகையில் அரச பயங்கரவாதத்தைக் கொடூரமாகக் கட்டவிழ்த்து விட்டன.**

**அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான மாற்றுவழி ஏதும் இல்லாத நிலையில் 'முள்ளை முள்ளால் எடுக்கும்' மார்க்கமாக – வரலாற்றுப் பிறப்பாக்கமாக – ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட அமைப்புகள் தமிழர் மத்தியில் எழுபதுகளின் கடைசியில் தோற்றம் பெற்று, அவை தீவிரமடைந்தன.**

**அந்தச் சமயத்தில், விரிவாக்கம் கண்டு வந்த தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைக் கூண்டோடு அழிப்பதற்குக் கங்கணம் கட்டிய சிங்கள அரசு, தமிழர் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது.**

**அதன் குரூர வடிவமாக தமிழர்களுக்கு எதிரான பண்பாட்டுப் படுகொலைக் கொடூரமாக அரங்கேறிய யாழ்ப்பாண பொதுநூலக எரிப்பின் 41ஆவது ஆண்டு நிறைவில் நாம் இன்று நிற்கின்றோம்.**

**சிங்கள அரசுகளின் தமிழின ஒழிப்புத் திட்டம் என்பது இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கில் – தமது பூர்வீகத் தாயகத்தில் – ஒரு தேசமாக, ஒரு தேசிய இனக் கட்டமைப்பாக – அவர்கள் நிலைத்துக் காலூன்றி, தழைத்து நிற்பதற்குக் காரணமான ஒவ்வொன்றையும் இலக்கு வைத்து அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.**

**தமிழ் இனத்தைத் தனித்துவமாக அடையாளப்படுத்தும் மொழி உரிமை முதலில் பறிக்கப்பட்டது. தொடர்ந்து கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, நிலவுரிமை என்று ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, கடைசியில் வாழ்வியல் உரிமை கூட மோசமாகப் பாதிக்கப்பட்டது. லட்சக் கணக்கில் அப்பாவித் தமிழர்கள் கொன்று போடப்பட்டார்கள். அல்லது நாட்டை விட்டுத் தப்பி ஓடி, பூமிப் பந்தெங்கிலும் தூக்கி வீசப்பட்டனர்.**

**இந்த வரிசையில் தமிழ்த் தேசிய இனத்தின் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்கிய யாழ்.பொது நூலகத்தை சீருடை தரித்த சிங்களக் காடையர்கள் தீயிட்டுக் கொழுத்தி, என்றுமே மன்னிக்க முடியாத படுபாதகச் செயலைப் புரிந்தனர்.**

**தமிழர்களின் வரலாற்றுப் பொக்கிஷத்தை பௌத்த, சிங்கள காடைத்தனம் கொடூரமாகச் சீரழித்த இந்தக் குரூரச் செயல் உலகத் தமிழ் மக்களின் இதயங்களைக் கொதிப்புற வைத்தது. சிங்களப் பேரினவாதத்தின் காட்டுமிராண்டித்தன முகத்தை உலகின் முன் அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியது. சர்வதேசங்களுமே அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றன.**

**தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கான நியாயப்பாட்டையும் அதற்கான சர்வதேசப் புறநிலையையும் தோற்றுவிக்கும் ஆரம்பக் கொடூரமாக இந்தப் பண்பாட்டுப் படுகொலை அடையாளப்படுத்தப்பட்டது.**

**சிங்களம் அன்று பொது நூலகத்தில் இட்ட தீ, நூல்கள் சாம்பலானமையுடன் அடங்கி விட்டது.**

**ஆனால் அது தமிழ்த் தேசிய ஆன்மாவினுள் கிளறி விட்டிருக்கும் நெருப்பு அடங்கி விடவில்லை. தமிழ்த் தேசிய விடுதலைக்கான உணர்வெழுச்சியாக அது இன்னும் கனன்று கொண்டே இருக்கின்றது. வெளியே தெரியாமல் கனன்று கொண்டே இருக்கின்றது என்பதுதான் உண்மை.**

# பதில் மாநகர ஆணையாளராக யோகராணியை நியமிக்கவும்!

## மேயர் ரோசி சேனாநாயக்க கோரிக்கை



கொழும்பு மாநகரசபை மாநகர ஆணையாளர்ரோஷினிதிஸாநாயக்கவிடுமுறையில் செல்வதாக எனக்கு அறிவித்திருக்கின்றார். அதனால் புதிய ஆணையாளர் ஒருவரை நியமிக்கும்வரை பிரதி ஆணையாளர் யோகராணிசில்வெஸ்டரைபதில்ஆணையாளராக நியமிக்குமாறு மேல் மாகாண ஆளுநரை கேட்டுக்கொள்கின்றேன் என கொழும்பு மாநகர சபை மேயர் ரோசி சேனாநாயக்க மாநகர சபையில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர ஆணையாளரின் நடவடிக்கைக்கு எதிரான ஐக்கிய தேசிய கட்சி கொண்டுவந்த அதிருப்தி பிரேரணை கொழும்பு மாநகர சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விவாதத்தில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை செவிமடுத்து, பதில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மாநகர ஆணையாளர் பல தடவைகள் மாநகர சட்டத்துக்கு முரணாக செற்பட்டு வந்திருந்தார். இதுதொடர்பாக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, அவரின் நடவடிக்கைக்கு எதிராக மாநகர சபைக்கு நடவடிக்கை எடுக்க முடியாது எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இதுதொடர்பாக சட்டமா அதிபரிடம் முறையிட்டு கேட்டபோது, மாநகர ஆணையாளரின் நடவடிக்கை சட்டத்துக்கு முரண் என அவர் எம்மிடம் தெரிவித்திருந்தார்.

மாநகர ஆணையாளர் சட்டத்தரணியாக இருந்தும் மாநகர சபை நடவடிக்கைகளில் சட்டத்தை மீறியே செயற்பட்டுள்ளார். அவரின் நடவடிக்கைகளால் மாநகர மக்களுக்கு மேற்கொள்ள இருந்த பல வேலைத்திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டன. இதுதொடர்பாக மேல் மாகாண ஆளுநருக்கும் முறையிட்டிருந்தோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க, ஜூன் முதலாம் திகதியில் இருந்து ஒன்றரை வருடம் விடுமுறையில் செல்வதாக ஆணையாளர் எனக்கு கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் அனுப்பி இருந்தார். அவர் விடுமுறை தொடர்பாக மாநகர மேயர் என்றவகையில் என்னிடமே கேட்டிருக்க வேண்டும். ஆனால் அனுபமுள்ள நிர்வாக அதிகாரியான அவர், எந்த அடிப்படையில் விடுமுறை பெற்றுக்கொண்டார் என எனக்குத் தெரியாது.

என்றாலும் ஆணையாளர் விடுமுறையில் செல்வதால், மேல் மாகாண ஆளுநர் புதிய ஆணையாளர் ஒருவரை நியமிக்கும் வரை, மாநகர பிரதி ஆணையாளராக இருந்து வரும் யோகராணி சில்வெஸ்டரை பதில் ஆணையாளராக நியமிக்குமாறு ஆளுநரை கேட்டுக்கொள்வதாக இந்த சபைக்கு அறிவிக்கின்றேன். – என்றார்.

# மேயரின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட மாநகர ஆணையருக்கு அதிகாரம் இல்லை!

## கொழும்பு மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைப்பு

மாநகர ஆணையாளரின் நடவடிக்கைகளால் மாநகர மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்க முடியாமல் இருந்து வருகின்றது. அதனால் புதிய ஆணையாளர் ஒருவரை நியமிக்க மேல் மாகாண ஆளுநருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கொழும்பு மாநகரசபை எதிர்க்கட்சி தலைவர் எம்.எச். மன்ஸில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர ஆணையாளரின் நடவடிக்கைக்கு எதிரான ஐக்கிய தேசிய கட்சி கொண்டுவந்த அதிருப்தி பிரேரணை கொழும்பு மாநகர சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொழும்பு மாநகர சபையில் 6 மேயர்கள் 7மாநகர ஆணையாளர்களுக்கு கீழ் சேவை செய்திருக்கின்றோம். ஆனால் தற்போதுள்ள மாநகர ஆணையாளரின் நடவடிக்கை மிகவும் மோசமாகவே இருந்து வருகின்றது.

மாநகர சபை மேயரின் தீர்மானத்தை மதிக்காமல் செயற்பட்டு வருகின்றார். அவரின் நடவடிக்கையால் மாநகரசபையால் மக்களுக்கு முன்னெடுக்க இருந்த பல வேலைத்திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேயரின் தீர்மானத்துக்கு எதிராக ஆணையாளர் செயற்பட முடியாது.

அத்துடன் தற்போதுள்ள மாநகர ஆணையாளர் மாநகர மக்களின் கோரிக்கைகளை மதிப்பதில்லை. மேயர் மற்றும் மாநகர உறுப்பினர்களின் கருத்துக்களைச் செவிமடுக்காமல் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகின்றார்.

மாநகர சபையில் எடுக்கப்படும் சட்ட ரீதியான தீர்மானங்களை இடைநிறுத்தவோ அதனை தடுப்பதற்கோ ஆணையானருக்கு எந்த அதிகாரமும் இல்லை.

அவ்வாறு இருந்தும் மேல் மாகாண ஆளுநர் ஊடாக மாநகரசபையால் தீர்மானிக்கப்படும் வேலைத்திட்டங்களை இடைநிறுத்தி வருகின்றார். இதனால் மாநகர சபை தொடர்பாகவும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பாகவும் எமது மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களே பரவுகின்றன.

குறிப்பாகக் கடந்த இரண்டு வருடங்களாக மாநகரசபையால் நிறைவேற்றப்பட்ட பல மக்கள் நல வேலைத்திட்டங்கள் ஆணையாளரின் தலையீட்டால் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

எனவே தற்போதுள்ள மாநகர ஆணையாளர் இந்தப் பதவியில் இருக்கும் வரை மக்கள் சேவைகளை எம்மால் முன்னெடுக்க முடியாத நிலையே இருக்கின்றது. அதனால் ஆணையாளரை இடமாற்றி, புதிய ஆணையாளர் ஒருவரை நியமிக்க மேல் மாகாண ஆளுநருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். – என்றார்.

# நியூஸிலாந்து உயர்தூதகருடன் வலு, சக்தி அமைச்சர் சந்தித்தார்



நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி துறையை மேம்மடுத்துவதற்கான உடனடி மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்கள் தொடர்பில் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர , இலங்கைக்கான நியூஸிலாந்து உயர் தூதகர் மைக்கல் எப்பல்டனுடன் கலந்துரையாடியுள்ளார்.

இவ்விருவருக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை வலு சக்தி அமைச்சில் இடம் பெற்றது. இதன் போதே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ' நியூஸிலாந்துக்கான உயர் தூதகருடன் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் தற்போதைய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள், புதுப்பிக்கத்தக்க மற்றும் எரிசக்தி துறைகளுக்கான உடனடி மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. – என்று குறிப்பிட்டுள்ளார்.




ஐங்கரன் விக்கினேஸ்வரா

# 1981 ஜூன் 1 இல் எரிந்த யாழ் நூலகம் என்றும் அணையாத அறிவாலயம்

தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திஸநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜுன் மாதம் முதலாம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது எனலாம்.

அடக்குமுறை அரசுகளினால் – தொடர்ச்சியாக 1958, 1977, 1883 களில் நிகழ்த்தப்பட்ட – திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன.




இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது. இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட இனவழிப்புச் செயல்களாகவே அமைந்தன. யாழ். எம்.பி. யோகேஸ்வரனின் வீடு, 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள் ஆகியனவும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இந்த எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் ஆகியவற்றைக் கொண்ட நூல் களஞ்சியமாக, தொல்பொருள் நிலையம் போன்று யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலகக் கட்டடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிஷமாகவே அனைவரையும் கவர்ந்தது.

அக்காலத்தில் இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச்செய்ய ஜே. ஆர். அரசாங்கம் முயற்சித்தது.

இச்சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடுவழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈடுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட உடனடியாக வழங்க ஜே. ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

இந்நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இன விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை. சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜே.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ் மக்கள் மனதில் ஏற்படுத்தின.

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது. தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கரவாதத்தால் இந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் பேரினவாதத்தின் உச்சக் கட்டம் என்றே குறிப்பிடுவர். பெரும்பான்மையான ஓர் இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.



இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல சிறிய நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறுதான்.

இனமேன்மை வாதத்தின் ஒரு அதீத வெளிப்பாடுதான் யாழ் நூலக எரிப்பு. அந்த வெளிப்பாட்டின் தீங்கையும் கொடுமையையும் வெளிப்படுத்தும் ஆவணமாக வெளிவந்த அணையாத அறிவாலயம் கவிதை தொகுப்பில் –

இன்னும் இவர்கள்
போதி மரத்தினில் 'பிரித்'
ஓதல் வேண்டுமா?
நல்ல நூல்களை எரித்து
குளிர் காயலாமே!

– என்று ஆத்திரம் கலந்த எதிர்க் குறிப்போடு கவிதைகள் அனலாய்ப் பாய்கின்றன.

வாளேந்திய
சிங்கக் கொடியாளர்கள்
சிம்மாசனத்தில் ஏறிய பின்
மக்கட்
சிரங்களையே அறுத்தனரே
அரசாள்வோர்
ஹிட்லரின் அடிச்சுவட்டில்
தொடரும் இனவாதம்
ஹிட்லரை மீறுகின்றதோ!

– என வினா எழுப்பப்படுகிறது. யாழ்ப்பாண நூல் நிலையம் அழிக்கப்பட்ட கொடிய செயல் உணர்வுக் கூர்மையுள்ள தமிழ் உள்ளங்களை எவ்வளவு கடுமையாகத் தாக்கியுள்ளது என்பதை இக்கவிதைகள் புலப்படுத்துகின்றன.

பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வு அகிலம் பூராக வெளிப்படுத்தப்படல் வேண்டும். மனிதவாழ்வியத்தின் இழுக்கக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ்நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ்நூலகம் எரிந்தமை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

# நிறைவேற்று அதிகாரத்தில் பெருமளவிலான அதிகாரங்கள் நாடாளுமன்றுக்குரித்தாகும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விளக்கம்



முப்படைகளின் பிரதானி என்ற அடிப்படையில் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சினை பிற தரப்பினரிடம் கையளிப்பது அரசமைப்பிற்கு முரணானது.

அரசமைப்பின் 21 ஆவது திருத்த சட்டமூல வரைவிற்கமைய பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி வசமாகும்.

அதே போன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தில் பெருமளவிலான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உரித்தாக்கப்படும் என நீதி மற்றும் அரசமைப்பு திருத்த மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரட்டை குடியுரிமையாளர் அரசியலில் செல்வாக்கு செலுத்த வாய்ப்பு வழங்கப்படும் என 'சுபீட்சமான எதிர்காலம்'கொள்கை திட்டத்தில் குறிப்பிடவில்லை.

மக்களாணைக்கு முரணாகவே இரட்டை குடியுரிமையாளர் அரசியலில் பிரவேசித்தார். தற்போது தவறை திருத்திக்கொள்ள வேண்டும்.

21ஆவது திருத்தத்துக்கு எதிராக செயற்படுபவர்களை மக்கள் கவனித்துக் கொள்வார்கள் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பின்பற்றிய தவறான பொருளாதார முகாமைத்துவம் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தி அதனைத்தொடர்ந்துஅரசியல்நெருக்கடியை தீவிரப்படுத்தி சமூகக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியதைத் தொடர்ந்து தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடைக்கால அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இடைக்கால அரசாங்கத்தின் முதற் கட்ட பணியாக அரசமைப்பின் 21ஆம் திருத்தத்தை நிறைவேற்ற அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு, அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நாட்டு மக்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஜனநாயக இலட்சினங்களை அடிப்படையாகக் கொண்டு அரசமைப் பின் 21ஆவது திருத்தச்சட்டமூல வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் அரசமைப்புபேரவைக்கும்,சுயாதீனஆணைக் குழுக்களுக்கும்,பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் திருத்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தின் பதவி காலம் மற்றும் நாடாளுமன்றம் கலைத்தல் தொடர்பில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் விடயதானங்கள் ஏதும் 21 ஆவது திருத்த யோசனையில் மாற்றியமைக்கப்படவில்லை. அத்தியாவசிய விடயங்களில் மாத்திரம் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் பாதுகாப்பு அமைச்சை வகித்தல் அவசியமாகும்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பிற தரப்பினருக்குக் கையளிக்கக் கூடாது எனவும்,அவர் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்க வேண்டும் எனவும் அரசமைப்பின் 3(4) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு பதவி வகிப்பது தொடர்பில் 2003 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் செயலாளர்கள், மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள் அரசமைப்பு சபை ஊடாக நியமிக்கப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள யோசனை பரிசீலனை செய்யப்படுகிறது.

21ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நாடாளுமன்றத் தெரிவு குழு ஒன்றை ஸ்தாபிக்குமாறு யோசனை முன்வைத்துள்ளேன்.

அரசியல் வரலாற்றில் பெரும்பான்மை பலம் உள்ள அரசாங்கம் நாட்டுக்கு எதிராக செயற்படும் போது பெரும்பான்மை பலம் இல்லாத அரசாங்கம் நாட்டுக்கு சாதகமான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதை எவரும் மறுக்க முடியாது.பெரும்பான்மை பலமில்லாத அரசாங்கம் கொண்டு வந்த 17ஆவது திருத்தத்தை பெரும்பான்மை பலமிக்க அரசாங்கம் நீக்கி 18ஆவது திருத்தத்தை கொண்டு வந்தது.

அரசமைப்பின்18ஆவதுதிருத்தத்தை பெரும்பான்மை பலமில்லாத நல்லாட்சி அரசாங்கம் நீக்கி 19ஆவது திருத்தத்தை கொண்டு வந்தது.

19ஆவது திருத்தத்தை பொதுஜன பெரமுன அரசாங்கம் பெரும்பான்மை பலத்துடன் நீக்கி அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை கொண்டு வந் தது. தற்போது பெரும்பான்மை பலமில்லாத அரசாங்கம் 21ஆவது திருத்தத்தை சமர்ப்பித்துள்ளது.

ஆகவே பெரும்பான்மை பலம் இல்லாத அரசாங்கம் நாட்டுக்கு சிறந்த தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இரட்டை குடியுரிமையுடையவர்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்துவதற்கு முழுமையாகத் தடை விதிக்க வேண்டும் என முழு நாட்டு மக்களும் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு முழுமையாக ஆதரவு வழங்க வேண்டும்.

மக்கள் தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள் தமது நிலைப்பாட்டுக்கு அமைய செயற்பட வேண்டுமே தவிரதனிநபரையும்ஒருகுடும்பத்தையும் பாதுகாப்பதற்கல்ல என்பதை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

21ஆவது திருத்தத்துக்கு எதிராகச் செயற்படும் பிரதிநிதிகளை மக்கள் கவனித்துக்கொள்வார்கள். – என்றார்.

# பொதுமக்களும் வர்த்தகர்களும் பொறுப்புடன் செயற்படவேண்டும்!

## இலங்கை மத்தியவங்கி அறிவிப்பு

அத்தியாவசியப்பொருள்களின் இறக்குமதிக்கு அவசியமான டொலர்கள் வங்கிக்கட்டமைப்பினுள் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், தற்போதைய சவாலான சூழ்நிலையில் வர்த்தக சமூகமும் பொதுமக்களும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டியது அவசியம் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

நிதியமைச்சால் மே 6 திகதியிடப்பட்டு, மே 20 ஆம் திகதி அமுலுக்குவரும் வகையில் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் தொடர்பான கட்டுப்பாடுகள் அடங்கிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன.

அதன்படி பொருள்களை இறக்குமதி செய்யும்போது அதற்குரிய கொடுப்பனவு திறந்த கணக்கின் மூலமான கொடுப்பனவு அடிப்படையில் மேற்கொள்ளப்படல் உள்ளிட்ட சில விடயங்களுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் உள்நாட்டு வங்கிக்கட்டமைப்பிற்குள்வெளிநாட்டுநாணயத்திரவத்தன்மை நிலையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் மத்திய வங்கியாலும்அரசாங்கத்தாலும்முன்னெடுக்கப்பட்ட ஏனைய நடவடிக்கைகளுக்கு உதவியாக அமைந்தன.

இருப்பினும் இறக்குமதிக்கான கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் காரணமாக வெகுவிரைவில் பாரிய உணவுத்தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வர்த்தக சமூகத்தைச்சேர்ந்த பல்வேறு தரப்பினராலும் வெளியிடப்பட்ட கரிசனைகள் மத்திய வங்கியின் அவதானத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறானதொருநிலையில்உணவுப்பொருள்கள் உள்ளடங்கலாக அத்தியாவசியப்பொருள்களுக்கான இறக்குமதியின்போது அதற்கு அவசியமான வெளிநாட்டு நாணயம் நாட்டின் வங்கிக்கட்டமைப்பிற்குள் காணப்படுவதை மத்திய வங்கி உறுதிப்படுத்தும் என்பதை நாம் மீளவலியுறுத்துகின்றோம். அதுமாத்திரமன்றி இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் தொடர்பில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களுக்கான பற்றாக்குறை ஏற்படுத்தாதிருப்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளும் மத்திய வங்கியால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அவசியமான வசதிகளை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி வங்கிக் கட்டமைப்புக்களுடன் மத்திய வங்கி கலந்துரையாடல்களை முன்னெடுத்துவருகின்றது.

அதேபோன்று அத்தியாவசியப்பொருள்களை இறக்குமதி செய்யும் தரப்பினருடனும், வர்த்தக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் மத்திய வங்கி பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

மேலும் அத்தியாவசியப்பொருள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தக அமைப்பினருடன் அண்மையில் நடத்திய பேச்சுகளின்போது, தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாக அவர்கள் மத்திய வங்கியிடம் உறுதியளித்தனர்.

சுங்கத்திலுள்ள அத்தியாவசியப்பொருள்களை விடுவிப்பதற்கு மத்திய வங்கி, இலங்கை சுங்கத்திணைக்களம், வர்த்தக அமைச்சு ஆகிய கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

எனவே இவ்வாறானதொரு சவாலான சூழ்நிலையில் வர்த்தக சமூகமும் பொதுமக்களும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்என்றுஅந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் பாதுகாப்பு இல்லை;

# இந்தியப் பிரதமரிடம் பாதுகாப்பு கோரும் முன்னாள் அமைச்சர்!



தனது வீடு மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துள்ளமையால் நாட்டில் மேலும் பாதுகாப்பு இல்லாத நிலையில் தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் –

தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஆராய்ந்து இந்த நாட்டில் பாதுகாப்பாக வாழ அனுமதிக்குமாறு இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி கோட்டா கோ கம போராட்டக்களத்தில் கட்சி சார்பற்ற அமைதியான போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியதை தாம் பிழையாகக் கருகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

தான் ஒரு கொசுவுக் குக் கூடத் தீங்கிழைக்காத மனிதர் என்றும் எனினும் தன்னால் இந்த நாட்டில் பாதுகாப்பாக வாழமுடியவில்லை என்றும் தெரிவித்த அவர், எனவே, அண்டை நாட்டு பிரதமரிடம் தன்னைப் பாதுகாக்குமாறு கோருகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மே 09 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.

இதன்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டு நாடாளுமன்றம் பிரவேசித்த முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் வீடும் போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு எதிராகவே நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு இந்திய பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# யாழ் நூலக எரிப்புக் கொடூரம் ஒரு பண்பாட்டுப் படுகொலை!



- பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன் -
(சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்.)

## தெற்காசியாவின் மாபெரும் அறிவுக் களஞ்சியத்தை இழந்த வரலாற்றுத் துயருடன் 41 ஆண்டுகள் நிறைவு

தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமாகப் போற்றப்பட்ட யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் (01.06.2022) 41 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் மாறாத துயரமாக அது காணப்படுகின்றது.

இந் நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி மாவட்ட சபை தேர்தல் கால வன்முறையின் போது எரிக்கப்பட்டது. இலங்கை அரசின் காவல் துறையினரும், அவர்களுடன் இணைந்தவர்களும் தமிழ் தேசியத்தின் பொக்கிஷமான நூலகத்தை எரித்தார்கள்.

நூலக வரலாற்றினை சற்று மீட்டிப் பார்ப்போமானால், க.மு.செல்லப்பா என்னும் ஆர்வலரொருவரால் உருவாக்கப்பட்டது இது. இந்த செல்லப்பா அச்சு வேலியை சேர்ந்தவர், யாழ்ப்பாண நீதிமன்றத்தில் காரியதரிசியாக இருந்தார். 1933 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது வீட்டில், சில நூல்களுடன் இவர் நடத்தி வந்த நூல் நிலையமே விசாலமாக வளர்ந்தது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில், 1934ஆம் ஆண்டு ஆனி மாதம் 9ஆம் திகதி ஐசாக் தம்பையா அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றே பொது நூலகத்தின் தோற்றத்திற்கு அடிகோலியது. இக்கூட்டக் காரியதரிசி திரு. க.மு.செல்லப்பா அவர்கள் சிரமப்பட்டுத் திரட்டிய 184ரூபா22சதம்தான்முன்னோடியான பொது நூலகம் ஒன்றிற்கான மூலதனமாய் அமைந்தது.

அன்றைய காலத்தில் அது ஒரு பெரிய மூலதனம் தான். இதன் வழி ஆஸ்பத்திரி வீதியில் வாடகை அறை ஒன்றில் 844 நூல்களுடனும் 36 பருவ வெளியீடுகளுடனும், 1934 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிறியதொரு பொது நூலகம் வசதியின்றி இடர்பட்ட போது அதனை யாழ்ப்பாணப் பட்டின சபை பொறுப்பேற்று, 1935 ஆம் ஆண்டு தை மாதத்தில் வாடி வீட்டிற்குத் தெற்கிலுள்ள மேல் மாடிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டு, அங்கே இயங்கி வந்தது. யாழ்ப்பாண பொது நூலகம் யாழ் மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழ் 1941 ஆம் ஆண்டில் இருந்து வருகின்றது. சகல வசதிகளையும் கொண்ட நவீன பொது நூலகக் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் 1952ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி சாம் ஏ.சபாபதி அவர்களின்தலைமையில், நடைபெற்ற ஒரு மகாநாட்டினை அடுத்து ஆரம்பிக்கப்பட்டன.

புதிய நூலகக் கட்டடத்தை அமைப்பதில் அதி.வணக்கத்திற்குரிய பிதா லோங் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். அவர்களது முயற்சியின் மூலம் நூலகத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த கலாநிதி எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்களின் ஆதரவும் கிடைத்தது. நூலகத்தின் அமைப்பிற்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்க சென்னை அரசின் கட்டடக் கலை நிபுணர் கே.எஸ்.நரசிம்மன் அவர்கள் வந்து வரைபடங்களைத் தயாரித்து உதவினார். கட்டட அடிக்கல் நாட்டு விழா 1953 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 29ஆம்திகதிநடைபெற்றது. திராவிடக் கலையம்சம் பொருந்திய எழில் மிகு அறிவுக் கோயில் ஒன்று பொது மக்களின் நிறைவான ஆதரவுடன் உருப்பெற ஆரம்பித்தது.

பொது நூலகத்தின் முதற்கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 11.10.1959 இல் அதி விமர்சைசையாக அப்போது யாழ். முதல்வராக இருந்த அ.த.துரையப்பா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நூலகத்தின் ஏனைய கட்டடங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. பூரணத்துவம் பெற்று இயங்கி வந்த இந்நூலகத்தில் நூலகர் உட்பட 33 பேர் கடமையாற்றி வந்தார்கள். இந் நூலகத்தை இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவின் தமிழ்நாடு உட்பட பல பாகங்களிலிருந்தும் தேடிச் சென்று



பயன்படுத்தியிருந்தனர்.

இவ்வாறு காணப்பட்ட யாழ் நூலகம் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இச் சம்பவமானது தமிழ் மக்களின் அடையாளம், அறிவு மற்றும் பண்பாடு போன்றவற்றை இல்லாதொழிக்கும் தமிழ் இன அழிப்பின் ஒரு அடையாளமாகவே தமிழ் மக்கள் இன்றும் பார்க்கின்றார்கள். இந் நூலக அழிப்பின் போது பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த தமிழ், ஆங்கில நூல்களும் மற்றும் ஓலைச்சுவடிகளும் அழிந்து போயின.

குறிப்பாக அழிந்த புத்தகங்கள் பற்றிப் பார்க்கும் போது, கிடைப்பதற்கு அரிதான ஐசாக் தம்பையா நன்கொடை கொடுத்த இலக்கியம், சமயம், மொழியியல் தத்துவம் தொடர்பாக சுமார் 6, 000 நூல்களும், இந்திய வர்த்தகர் ஒருவரால் கொடுக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சத்தியசோதனை, 1672 ஆம் ஆண்டில் பிலிப்பஸ் பால்டியார் என்பவர் எழுதிய டச்சு ஆட்சியில் இலங்கை என்னும் நூல், 1660 ஆம் ஆண்டில் கண்டி மன்னரால் சிறைபிடிக்கப்பட்டவேளை றொபேட் நொக்ஸ் என்பவர் எழுதிய இலங்கையராவார் என்னும் நூல் ஆகியவையும் அழிந்தன. மேலும் 1585 ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத்தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல், சேர் பொன்னம்பலம் இராமநாதன் எழுதிய பகவத்கீதை விளக்கம், சித்தாந்தம், செந்தமிழ் இலக்கிய நூல்கள், திருமதி இராமநாதன் அம்மையார் எழுதிய இராமாயண மொழிபெயர்ப்பு, மகாகவி பாரதியாரின் நண்பரான நெல்லையப்பன் எழுதிய நூல்கள், கடலைக்குடி நடேச சாஸ்திரியார் எழுதிய சோதிட சாஸ்திர நூல்கள், வானசாஸ்திரம் சம்பந்தமான நூல்கள், சித்தவைத்திய வாசகங்கள் அடங்கலான ஏட்டுச்சுவடிகள் ஆகியவை அழிந்தன.

அதுமட்டுமில்லாது முத்துத்தம்பி பிள்ளை ஏழுதிய அபிதானகோசம், சிங்காரவேலு முதலியார் எழுதிய அபிதான சிந்தாமணி, முதலியார் இராசநாயகம் எழுதிய புராதன யாழ்ப்பாணம், சுவாமி ஞானப்பிரகாசம், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய நூல்கள், கல்லடி வேலன் என்று அழைக்கப்பெற்ற கே.வேலுப்பிள்ளை இயற்றிய யாழ்ப்பாண வைபவகௌமுகி, சிற்பக்கலை பற்றிய நூல்கள், தனிநாயக அடிகளாரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட 'தமிழ் கலாசாரம்' எனும் ஆங்கில சஞ்சிகை, இராசையனார், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, ஆனந்தகுமாரசாமி மற்றும் முதலியார் குலசபாநாதன் சேகரித்த நூல்கள், மற்றும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்து பிரதிகளும் அழிவடைந்தன. யாழ் நூலகத்தில் கிட்டத்தட்ட 97,000 அரியவகை நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

தென்னாசியாவின் மிகப் பெரிய அறிவியல் பொக்கிஷமாகப் போற்றப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகத்தின் அழிப்பு என்பது மனித நாகரிகத்தின் மோசமான துயரம். 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி நள்ளிரவில் இந்தக் கொடுமை நேர்ந்த போது அதனை சென் பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியில் இருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்த கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி ஒன்றே அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட மறுநாள் ஜூன் மாதம் இரண்டாம் திகதி எரிந்த சாம்பலான நிலையில் காட்சியளித்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# தோட்டங்களில் பட்டினிச் சாவைத் தடுக்க தரிசு காணிகளை உடன் பிரித்துவழங்குக!

## மனோ கணேசன் பிரதமருக்கு கடிதம்



தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத தரிசு நிலங்களை பிரித்து, தோட்டங்களில் நிரந்தரமாக உழைக்கும் மக்களுக்கு வழங்கும்படி நான் உங்களை வேண்டுகிறேன். என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உரம் இல்லாததால், நெல் விளைச்சல் இல்லை. உள்நாட்டு நெல் விளைச்சல் இல்லாததால் அரிசி இல்லை. அதேபோல், உரப்பிரச்சினை தேயிலை உற்பத்தியையும் பாதித்துள்ளது. தோட்டங்களில் வேலை இல்லை. ஆகவே வருமானம் இல்லை. உணவுக்காக, அரிசி, கோதுமை வாங்கப் பணமுமில்லை. கடைகளில் பொருளுமில்லை.

இதனால் ஏற்கனவே வாழ்வாதாரம் இல்லாமல் மிகவும் நலிவடைந்த நிலையில் இருக்கும் தோட்டங்களில் வாழும் மக்கள் மத்தியில் உணவு பஞ்சம் ஏற்படலாம். இன்னமும் சில மாதங்களில் பட்டினி சாவு வரலாம். இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத தரிசு நிலங்களை பிரித்து, தோட்டங்களில் நிரந்தரமாக உழைக்கும் மக்களுக்கு வழங்கும்படி நான் உங்களை வேண்டுகிறேன். விவசாய அமைச்சின் அனுசரணையையும் இவர்களுக்கு வழங்கச் சொல்லுங்கள். இந்நிலங்களில் குறுகிய காலத்தில் பயன் தரும் விளை பயிர்களைத் தொழிலாளர்கள் பயிரிட்டு தங்கள் தங்கள் வீட்டுத் தேவைகளுக்கு பெற்றுக்கொள்வார்கள். அதேபோல் நாட்டின் உணவுத் தேவைக்கும் இந்த பயிரிடல் பங்களிப்பை வழங்க முடியும் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் கோரியுள்ளார்.

நுவரெலியா, கொழும்பின் அவிசாவளை, பதுளை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, காலி, மாத்தறை, மொனராகலை, குருநாகலை ஆகிய மாவட்ட பெருந்தோட்டங்களில் வாழும் உழைக்கும் மக்கள் வருமானமின்றி நிர்க்கதி நிலையில் ஏற்கனவே பெருந்துன்பங்களை சந்தித்து வருகிறார்கள். நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியால், இன்னமும் சில மாதங்களில், உண்ண உணவின்றி நம் நாட்டில் பட்டினி சாவை சந்திக்க கூடியவர்களாக கணிக்க கூடியயோர் பட்டியலில் முதன்மை நிலையில் இருப்போர் இவர்களே.

'தொழிலாளர்கள்' என்ற அடையாளத்தால் இவர்களுக்கு முறையாக சமுர்த்தி கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை. கிடைக்காத சம்பள கணக்குகள் காரணமாக இவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே இல்லை என்ற போலி புள்ளி விவரங்கள் காரணமாக இவர்களுக்கு நியாயம் எப்போதும் கிடைப்பதில்லை. உண்மையில் கீழே ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் இந்த மக்களே வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்கிறார்கள்.

மானிய விலையில், கோதுமை மா தருகிறோம், மண்ணெண்ணெய் தருகிறோம் என்று காலத்துக்கு காலம் சொல்லப்பட்டாலும் கூட எதுவும் உருப்படியாகக் கிடைப்பதில்லை.

ஆகவே தோட்டங்களில் அடாத்தாக கிடக்கும் தரிசு காணிகளை பிரித்து, தோட்டங்களில் நிரந்தரமாக உழைக்கும் மக்களுக்கு வழங்கும்படி நான் உங்களை வேண்டுகிறேன். இந்த நிலங்களில் குறுகிய காலத்தில் பயன்தரும்விளைபயிர்களைகடும்உழைப்பாளிகளான இந்த உழைக்கும் மக்கள் பயிரிட்டு தங்கள் வீட்டு தேவைகளுக்கு பெற்றுக்கொள்வார்கள். அதேபோல் நாட்டின் உணவுத் தேவைக்கும் இந்த பயிரிடல் கணிசமான பங்களிப்பை வழங்க முடியும்.

விவசாய அமைச்சின் அனுசரணையையும் வழங்க பணிப்புரை விடுக்கும்படி கோருகிறேன். அவ்வாறாயின் குறுகிய காலத்தில் பயன் தரும் உணவு பயிர்களை பயிரிட உரிய ஆலோசனைகளையும், ஒத்தாசைகளையும் அவர்களால் பெற முடியும். நான் மேலே குறிப்பிட்ட மாவட்டங்களுக்குள் வரும் பிரதேச செயலாளர்களை அழைத்து அவசர கலந்தாலோசனையை ஏற்படுத்துமாறு அன்புடன் கோருகிறேன்.

தோட்ட பிரதேசங்களில் நிலவும் வரலாறு காணாத அசாத்திய வறுமை காரணமாக அங்கே தங்களது ஆட்சியின் கீழ் பட்டினி சாவுகள் நிகழ முன்னர் இதை நீங்கள் செய்வீர்களாயின் மிகவும் நன்றி உடையவனாக இருப்பேன். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ் நூலக எரிப்புக் கொடூரம் ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூலகத்திற்குள் கம்பீரமாக நின்ற புத்தக அலுமாரிகள் எல்லாம் நிலத்திலே பாட்டமாக வீழ்ந்து கிடந்தன. கோவிலாக வழிபட வேண்டிய அந்த கட்டடம் எல்லாம் உடைந்து சீமெந்து துகள்களாகவும், சாம்பலாகவும் காட்சியளித்தது. இந்த நூலக எரிப்பு மூலம் தென்னாசியாவில் இருந்து தேடி வைத்த பொக்கிஷங்கள் – குறிப்பாக ஓலைச் சுவடிகள் – 1800 ஆம் ஆண்டுக்கான பத்திரிகை பதிவுகள் – அனைத்தும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

1981 ஆம் ஆண்டு நூலகம் எரிக்கப்பட்ட போது 97 ஆயிரம் புத்தகங்களும், பழைமைவாய்ந்த ஓலைச்சுவடிகளும், தனிநபர்களின் சேமிப்பு புத்தகங்களும் முற்று முழுதாக அழிவடைந்தன.

பின்னர் 2004 ஆம் ஆண்டு மீண்டும் புனரமைக்கப்பட்டு நூலகம் திறந்து வைக்கப்பட்டது. தற்போது ஒரு இலட்சத்தி 8 ஆயிரம் புத்தகங்களும், தனிநபர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஓலைச் சுவடிகளும் உள்ளன. இந்தியா அரசாங்கத்தினால் 16 ஆயிரம் புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. நாளாந்தம் பெருமளாவன வாசகர்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என யாழ் பொது நூலக பிரதான நூலகர் சுகந்தி சதாசிவமூர்த்தி அவர்கள் கருத்து வெளியிட்டிருந்தார்.

மாவட்ட சபை தேர்தலுக்காக அன்று யாழில் கூடியிருந்த அமைச்சர்கள் இங்கு ஜக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தனர். அந்த தேர்தல் முடிவுகளை மாற்றி அமைக்க வேண்டும் என்ற அவர்களின் செயற்பாட்டை துணிந்து எதிர்த்து நின்ற அரச அதிபர் யோகேந்திரா துரைசுவாமியினால் அவர்களின் சதி முயற்சி முறியடிக்கப்பட்டது. இதனால் அன்று துரையப்பா விளையாட்டரங்கில் நிலை கொண்டிருந்த காவல்துறையினரும், அவர்களுடன் இணைந்து சிலரும் நூலகத்தை தீக்கிரையாக்கினர்.

எரிக்கப்பட்ட நூலகத்தின் முன்பகுதியை நினைவுச் சின்னமாக பேணிக்கொண்டு நூலகத்தின் மேற்குப் பகுதியை புதிதாக நிர்மாணித்து 1984 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4 ஆம் திகதி பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலக பகுதி அமரர் அமிர்தலிங்கம் ஊடாக யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் அவர்களால் திறக்கப்பட்டது. இதன் பின்னர் யுத்தம் காரணமாக நூலகம் மீண்டும் சிதைக்கப்பட்டது. சிதைக்கப்பட்ட நூலகத்தினை புனரமைப்புச் செய்வதற்கு அதன் பின் வந்த அரசாங்கங்கள் முனைப்புக் காட்டியிருந்தன. இதனால் நூலக எரிப்பினை நினைவு கூரும் வகையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த நூலகத்தின் முன் பகுதி முழுமையாக புணரமைக்கப்பட்டு, நூலக எரிப்பின் சான்றும் அரசாங்கத்தால் திட்டமிட்டு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட பின்னர் நவீனத்துவத்துடன் தற்போது இயங்கி வருகின்றது. குறிப்பாக கணினி உட்பட பல்வேறு வசதி வாய்ப்புக்கள் அங்கு உள்ளன. இருந்த போதும் நாங்கள் இழந்த தமிழ் மக்களின் ஓலைச் சுவடிகள் உட்பட பல பொக்கிஷங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலேதான் இருக்கின்றோம்.

எனவே தெற்காசியாவின் பொக்கிஷமா கக் காணப்பட்ட யாழ் நூலகமானது அழிக்கப்பட்டு இன்றுடன் 41 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அதன் பண்பாட்டையும், அடையாளச் சின்னங்களையும் அறிவுத் தடங்களையும், அதன் சரித்திரத்தையும் அழிக்க வேண்டும் என்ற இன அழிப்புக் கொள்கைக்கு அமைவாகத்தான் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது.

ஈழத்தமிழர்கள் இந்த அழிப்பின் மூலம் மாபெரும் அறிவிழப்பையும், தொன்மைச் சிறப்பு இழப்பையும் சந்தித்துள்ளனர். ஆகவே இருபதாம் நூற்றாண்டில் நடந்த மிகப்பெரிய நூலக எரிப்பு வன்முறையாக அடையாளம் காணப்பட்டது யாழ் நூலக எரிப்பு என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## ஆஸி. அழகிப் போட்டியில் இலங்கை நடிகை வெற்றி!

இலங்கையின் வளர்ந்து வரும் நடிகையொருவர் ஆஸ்திரேலியாவின் அழகிப் போட்டியொன்றில் வெற்றி பெற்றுள்ளார்.

இதற்கான போட்டியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் இலங்கை சிங்கள தொலைக்காட்சி நாடக நடிகையொருவர் வெற்றி பெற்றுள்ளார்.

இலங்கையை பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜனிதா பெரேரா எனும் மாடல் அழகியே இவ்வாறு அழகிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் போட்டிகள் வரும் டிசெம்பர் மாதம் ஸ்பெயினின் சான் ஜோஸ் நகரில் நடைபெறவுள்ளன. இதில் வெற்றி பெறும் அழகிக்கு கடந்த ஆண்டு மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை வென்ற இந்திய அழகி ஹர்னாஸ் சந்து கிரீடம் சூட்டவுள்ளார்.




## தமிழ் தேசிய பாதையில் பயணித்த மூத்த போராளிகளின் 74 வருட போராட்டங்களை அரசியலால் வெல்லவேண்டும்

### சாணக்கியன் எம்.பி. கருத்து



தமிழ் தேசிய பாதையில் பயணித்த மூத்த போராளிகளின் 74 வருட போராட்டங்களை அரசியலால் வெல்ல வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கை தமிழ் அரசு கட்சியின் உயிரிழந்த உறுப்பினர்களின் ஒரு வருட நினைவையொட்டிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் காலங்களில் கிழக்கில் கடந்த தேர்தலை போன்று செயற்படாது ஓரணியில் நின்று தமிழ் தேசிய பாதையில் பயணிக்க வேண்டும். அபிவிருத்தி என்கின்ற மாயையில் பொய்மையை நம்பாது மூத்த அரசியல் போராளிகள் போன்று இளைஞர்களும் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் எமக்குள் உருவாகியுள்ளது. சிங்கள தேசப் பிரச்சினைகளை விடத் தமிழ் தேசிய பிரச்சினைகள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் முகங்கொடுத்து பெரும் சவாலுடன் வாழ்ந்து வருகிறோம். வாகரை பகுதியில் இடம் பெற்ற பல கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளேன். அங்கு அவர்கள் கூறுகின்றமையும் இது தான். மக்களை ஏமாற்றும் அரசியலை விடவும் தூயமான அரசியலை செய்வதற்கு ஒத்துழைக்க வேண்டும். – என்றனர்.

இதில் இலங்கைதமிழ்அரசுகட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைய 5 வழிமுறைகளில் உதவிகளாம்!

## கூறுகிறார் இலங்கைக்கான சீனத்தூதுவர்

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீட்சிய டைவதை முன்னிறுத்தி 5 வழிமுறைகளில் உதவிகளை வழங்கிவருவதாகவும், குறிப்பாக இலங்கையில் அதிகளவான முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதைத் தாம் வரவேற்கிறோம் எனவும் இலங்கைக்கான சீனத்தூதுவர் கி சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 3 நாள்கள் உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்திற்குச் சென்ற சீனத்தூதுவர், அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்தார்.

அவரது விஜயம் தொடர்பில் இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற் கண்ட விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வரு மாறு –

இலங்கைக்கான சீனத்தூதுவர் கி சென்ஹொங் கடந்த 24 ஆம் திகதி திருகோணமலையிலிருந்து கிழக்கு மாகாணத் துக்கான தனது 3 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பித் தார்.

அங்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உள்ளிட்ட அதிகாரிகளால் வரவேற்கப்பட்ட சீனத்தூதுவர், அவரது விஜயத்தின் முதலாவது நாளில் சீன வர்த்தகப்பேர வையின் பிரதிநிதிகளுடனான வர்த்தக மாநாடொன்றுக்குத் தலைமை தாங்கினார்.

இதன்போது இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளிலிருந்து மீட்சியடைவதற்கு உதவும் வகையில் இலங்கையில் அதிகளவிலான முதலீடுகள் மேற்கொள் ளப்படுவதை சீனா வரவேற்பதாக சீனத்தூதுவர் தெரிவித் தார்.

அதுமாத்திரமன்றி பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீட்சியடைவதை முன்னிறுத்தி பல்வேறு வழி முறைகளின் ஊடாகக் கடனுதவிகளை வழங்கல், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்தும் சீனாவின் உதவி யுடன் முன்னெடுக்கப்படுவரும் செயற்திட்டங்களைத் துரிதப்படுத்தல், இருதரப்புக் கடன் மீள்செலுத்துகைகள், சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களில் இலங்கைக்கு உதவுதல் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியின் பின்னர் மீண்டும் சுற்றுலாத்துறையைக் கட்டி யெழுப்பல் ஆகிய 5 பரிமாணங்களிலான உதவிகளை சீனா வழங்கிவருவதாகவும் அந்நாட்டுத்தூதுவர் கி சென்ஹொங் சுட்டிக்காட்டினார்.

அதனைத்தொடர்ந்து திருகோணமலை துறைமுகத்திற்கு படகில் விஜயம்செய்த சீனத்தூதுவரிடம் கைத்தொழில் மற் றும் சுற்றுலா ஆகியவற்றுடன் தொடர்புடைய துறைமுக நட வடிக்கைகளில் சீனாவை முதலீடு செய்யுமாறு இலங்கைத் துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளும் கிழக்கு மாகா ணத்தின் முக்கிய அதிகாரிகளும் கேட்டுக்கொண்டனர்.



மேலும் தற்போது பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத் திருக்கின்ற திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச்சேர்ந்த குறைந்த மற்றும் நடுத்தர வருமா னம் பெறும் குடும்பங்களுக்கு அவசியமான உணவுப்பொதிக ளையும் தூதுவர் கி சென்ஹொங் வழங்கிவைத்தார்.

இந்த உணவுப்பொதிகள் சீனாவின் யுனான் மாகாணத் தைச்சேர்ந்த மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்டவை என்பதுடன், அவை ஒவ்வொன்றும் 5 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியானவையாகும். அத்தோடு கல்முனை இளைஞர், யுவதிகள் பயன்பெறக்கூடியவகையிலான விளையாட்டு உப கரணங்களையும் சீனத்தூதுவர் நன்கொடையாக வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார சிக்கலுக்கு முதற்காரணி ஜனாதிபதியே!

## சுமந்திரன் எம்.பி. சாடல்



பொருளாதார சிக்கல்களுக்கு முதன்மை காரணி ஜனாதிபதியே என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும் இதனையே உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியமும் விரும்புகின்றன. இல்லாது போனால் பொருளாதாரத்தை சீர் செய்ய முடியாது. ஜனாதிபதி உடன் பதவி விலகி மக்கள் ஆணை மூல மான அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பதையே மக்களும் விரும்புகின்றமையுடன் கோட்டா ஹோ ஹோம் என்றும் கூறி வருகிறார்கள் .19 ஆவது திருத் தம் இலகுவாக்கப்பட்டது 21 ஆம் திருத்தம் மூலமாக நிறைவேற்றதிகாரம் முற்று முழுதாக ஒழிக்கப்பட வேண் டும் என்பதே சிறந்தது. – என்றார்.

# தேயிலைத் தொழிற்சாலைகள் நாட்டில் மூடப்படும் அபாயத்தில்!

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டுகாரணமாக தென்னிலங்கை தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்ப டும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என சிங்கள ஊடகமொன்று தெரிவித் துள்ளது.

எரிபொருள்பற்றாக்குறை, மின்வெட்டு என்பன காரணமாக ஏராளமான நெருக்கடி களை தேயிலைத் தொழிற்சாலை உரி மையாளர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் உற்பத்திக்கான செலவும் அதிகரித்துள்ளதுடன், அதனை ஈடுகட்டப் போதுமான அளவில் தேயிலை உற்பத்தி யும் நடைபெறாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்சாலைகளை இயக்குவதற்கு டீசல் தேவை என்ற போதி லும் அண்மைக்காலமாக நாட்டில் டீச லுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக உயர்தரமான தேயிலைத்தூள் உற்பத்தி செய்வதிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தும் நீடித்தால் தமக்கு தேயிலைத் தொழிற்சாலைகளை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அதன் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# ஜூன் மாத எரிபொருள் இறக்குமதிக்கு 55 கோடியே 40 லட்சம் டொலர் தேவை!

## வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன தகவல்

எரிபொருளை இறக்குமதி செய்வதற் கான டொலர் தேவை தொடர்பில் மத் திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுடன் கலந்துரையாடல் முன்னெ டுக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஜூன் மாதத்துக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 55 கோடியே 40 லட்சம் டொலர் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட் டுள்ளது.

இதற்குத் தேவையான நிதியில் 10 கோடி டொலர் இந்திய கடனுதவி திட்டத் தின் கீழ் பெறுக் கொள்ளப்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரி வித்துள்ளார்.

அத்தோடு இந்தியாவிடமிருந்து மேலும் 50 கோடி டொலரை புதிய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் மத்திய வங்கி ஆளுநருடன் கலந்துரையாடப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், பெற்றோலியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக பல தரப்பட்ட பேச்சுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அல் குர் ஆனை அவமதிக்கும் ஞானசார தேரர் குற்றச்சாட்டுகளை முன்வைக்குமாறு தெரிவிப்பு!

## சட்ட மா அதிபர் ஆலோசனை

பொது பல சேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக, மத உணர்வுகளைப் புண்படுத்தும் வார்த்தைப் பிரயோகங் களை செய்தமை தொடர்பில் தண்டனை சட்டக் கோவையின் 291 அ அத்தியாயத் தின் கீழ் குற்றச்சாட்டுக்களை முன்வைக் குமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

2014.04.12 அன்று மதங்களுக்கு இடையே வேற்றுமைகள் தோன்றும் வகையில் ஊடகங்களிடம் புனித அல் குர் ஆனை அவமதிக்கும் வண்ணம் ஞானசார தேரர் கருத்துக்களை வெளி யிட்டார் என முன்வைக்கப்பட்ட முறைப் பாடுகளுக்கு அமைய முன்னெடுக்கப் பட்ட விசாரணைகளுக்கு அமைய இந்த ஆலோசனையை சட்ட மா அதிபர், விசா ரணைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு வழங்கி யுள்ளார்.

அல்குர் ஆன் அவமதிப்பு தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட நிலையில் அதன் விசா ரணைகள் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு கோட்டை நீதிவான் முன்னிலையில் விசா ரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் 2014.05.05 அன்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஞானசார தேரர் சட்டத்தரணி ஒருவர் ஊடாக சரணடைந்திருந்த நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந் தார்.

அவ்வாறான நிலையில், அந்த வழக்கு திங்கட்கிழமை கோட்டை நீதி வான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, விசாரணையாளர்க ளுக்காக மன்றில் ஆஜரான பொலிஸ் அதிகாரி, விசாரணைகள் நிறைவு பெற்று சட்ட மா அதிபரிடம் ஆலோசனை கோரப் பட்டிருந்த நிலையில், ஞானசார தேர ருக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் 291 அ அத்தியாயத்தின் கீழ் குற்றச்சாட்டு தாக்கல் செய்ய ஆலோ சனை கிடைக்கப்பெற்றுள்ளதாக மன் றுக்குத் தெரிவித்தார்.

அதன்படி அதனைத் தாக்கல் செய்ய திகதியொன்றைத் தருமாறு அவர் கோரினார். இதன்போது மன்றில், இந்த விவகாரத்தில் பொலிஸில் முறைப்பாடு செய்தவர்களுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், பாதிக்கப்பட்ட தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தி மன்றில் ஆஜராகி யிருந்தார்.

ஞானசார தேரருக்காக சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்த மன்றில் முன் னிலையானார். இந் நிலையில் பொலி ஸாரின் கோரிக்கை பிரகாரம், ஞானசார தேரருக்கு எதிரான குற்றச்சாட்டை தாக் கல் செய்ய வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப் பட்டது.

# மலேசியாவில் தொழில் வாய்ப்புக்களை இலங்கையருக்கு அதிகரிக்க ஆலோசனை!



கொழும்பு, ஜூன் 01

இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில்வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆலோசனை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கான மலேசியத் தூதுவர் டெங்யெங் தாய் உடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மலேசியத் தொழில் வாய்ப்புக்கான பயிற்சி மையம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான வீசாவை இடைநிறுத்தியிருந்த மலேசியா தற்போது மீண்டும் வீசா வழங்கும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையர்களுக்கு கூடுதல்வேலைவாய்ப்புகளைவழங்குவது குறித்த அமைச்சரின் வேண்டுகோள் கவனத்திற் கொள்ளப்படும் என்று மலேசியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

கடந்த 2016 ஆம்ஆண்டு மனுஷ நாணயக்கார வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புபிரதிஅமைச்சராக இருந்தபோதும் இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தில் மீண்டும் தொழில்நுட்பக் கோளாறாம்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகிறார்



சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவொன்றிலேயே அவர் இதனை அறிவித்துள்ளார்.

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் இயங்க வைக்கப் போகிறேன் என கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் மூலம் அறிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை ஆரம்பிக்க முயற்சிக்கையில் இயந்திரங்களில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப அதிகாரிகள் தற்போதைக்கு கோளாறை சீர்திருத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இன்னும் சில நாள்களில் அதனை சீர்திருத்திக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மூடப்பட்டது.

அதன் பின்னர் நீண்ட காலம் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமை காரணமாகவே இந்த தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# பிரித்தானியாவின் கவுன்ஸில் ஒன்றுக்கு துணை மேயராக இலங்கை தமிழ் பெண்!





பிரித்தானியாவின் வாண்ட்ஸ்வொர்த் கவுன்ஸிலின் துணை மேயராக சர்மிளா வரதராஜ் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்மிளா வரதராஜ், புளோரிடா, சுவிட்ஸர்லாந்து, தாய்லாந்து மற்றும் சிலி ஆகிய நாடுகளில் நான்கு வெளிநாட்டுப் படிப்புகளை முடித்து, ஹெர்ட்போர்ட்ஷையர் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வணிகத்தில் வாலடிக்டோரியன் (உயர்ந்த தரவரிசை மாணவி) பட்டம் பெற்றுள்ளார்.

பர்ன்ட்வுட் பள்ளியில் மாணவியாக இருந்த காலத்திலிருந்தேமனிதஉரிமைகள்ஆர்வலராகஇருந்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு எதிராக செயல்படும் பிரித்தானிய தமிழர்கள் மன்றம் என்ற சட்டத்தரணிகள் அமைப்பிற்கு அவர் தன்னார்வத் தொண்டு செய்யத் தொடங்கியுள்ளார்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்துள்ளார். அவர் தன்னார்வ தொண்டு நிறுவனம், உலகளாவிய மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் 21 வயதில் இருந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் செய்தித் தொடர்பாளராக இருந்து வருகிறார்.

அவர் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துடனான வழக்கமான ஈடுபாட்டின் மூலம் இலங்கை தொடர்பான மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களில் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்து நெருக்கடியால் மரக்கறி சந்தை மூடப்படும் அபாயம்

மெனிங் சந்தை உள்ளிட்ட காய்கறிச் சந்தைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன காய்கறி வர்த்தகர் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய போக்குவரத்து நெருக்கடி காரணமாக விவசாயிகளின் உற்பத்திகள் மெனிங் சந்தை மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு எடுத்து வரப்படுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடி காரணமாக காய்கறிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தக்காளி ஒரு கிலோ 700 ரூபா வரை உயர்ந்துள்ளது. ஏனைய காய்கறிகளும் அவ்வாறே விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மெனிங் சந்தை வர்த்தகர்கள் தாங்களே வாடகை வாகனங்கள் மூலம் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டு விவசாயிகளிடம் நேரடியாக காய்கறிகளை கொள்வனவு செய்யும் தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

எனினும் போதுமான அளவில் காய்கறிகள் கிடைக்காத பட்சத்தில் பொருளாதார மத்திய நிலையங்கள் மட்டுமன்றி மெனிங் சந்தையும் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாற்று வலுவுடையவர்கள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு கரிசனை

மாற்று வலுவுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் வடமாகாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

மாற்றுவலுவுடையோர் பொது இடங்களுக்கு பிரவேசிப்பதற்குரிய அணுகும்வசதிகளை ஏற்படுத்துவதற்கு சட்டங்களும், ஒழுங்குவிதிகளும், உயர்நீதிமன்ற தீர்ப்பும் வலுவில் உள்ள நிலையில் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் மாற்றுவலுவுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்காமை தொடர்பில்இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்பின் பிரகாரம் 3 ஆம் அத்தியாயத்தின் உறுப்புரை 12 இன் உப பிரிவு 2 இன் பிரகாரமும் 1996 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க மாற்று வலுவுடையோரினுடையஉரிமைகளைப்பாதுகாப்பதற்கான சட்டத்தின் பிரகாரமும் இலங்கையில் மாற்று வலுவுடையோரது உரிமைகளைப் பாதுகாப்பது சகலரதும் பொறுப்பாகும்.

அத்துடன் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வத்தமானி இல 1465/15 (ஒக்ரோபர் 17 2018) பிரகாரம் சகல அரச திணைக்களங்களிலும் மாற்றுவலுவுடையோருக்கான அணுகுதல் வசதியை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பில் பல ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கிலக்கம் எஸ்.சி.எவ்.ஆர். இல. 221/2009 இன் தீர்ப்பில் மாற்றுவலுவுடையோருக்கு அணுகுதல் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் மிக தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் மாற்றுவலுவுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்காமை தொடர்பில் 1996/21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மற்றும் வவுனியா அலுவலகங்களில் அவதானிப்புகளின் கீழ் இரண்டு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றதன் அடிப்படையில் இலங்கை வங்கியின் உரும்பிராய் கிளையிலும் முல்லைத்தீவு கிளையிலும் மாற்றுவலுவுடையோர் உட்பிரவேசிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திகொடுக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பல நிறுவனங்களில் மாற்றுவலுவுடையோர் உட்பிரவேசிப்பதற்கான வசதிகள் காணப்படவில்லை என்பதுடன் அந்நிறுவனத் தலைவர்கள் தாமாக முன்வந்து மாற்றுவலுவுடையோர் உட்பிரவேசிப்பதற்கான வசதிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம், வவுனியா அலுவலகம் கேட்டுக்கொள்கின்றது. – என்று அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.06.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# கப்பல்களை இலக்கு வைத்துத் தாக்குகின்ற பாலிஸ்டிக் ஏவுகணைகளை சீனா சோதனை

## பாலைவனங்களில் மாதிரி இலக்குகளை அமைத்து சத்தம் சந்தடியின்றி பரீட்சிப்பது அம்பலத்துக்கு ...!



எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மோதல்களின் போது கப்பல்களைத் தாக்கி அழிக்கும் தனது திறனை வளர்த்துக் கொள்வதற்காக சீனா, சின்ஜியாங்கின் தொலைதூர தக்லமாகன் பாலைவனத்தில் புதிய இலக்குத் தளங்களைப் பயன்படுத்தி கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளைச் சோதனை செய்வதை செயற்கைக்கோள் படங்கள் வெளிப்படுத்துகின்றன என்று ஏ.என்.ஐ. தகவல்கள் தெரிவிக்கின்றன.

செயற்கைக்கோள் புகைப்படங்களின் படி, பாலைவனத்தின் கிழக்கு விளிம்பில் நீண்டு அசையும் பெரிய அளவிலான இலக்கு வரம்புகளின் தொடர்ச் சரம் காணப்படுகிறது.

இந்த தளங்களில் உள்ள இயற்கை தன்மை, அவை நிலை கொண்டுள்ள இருப்பிட அமைவு மற்றும் தாக்குதல்கள் போன்ற அனைத்து காரணிகளும் அவை பாலிஸ்டிக் ஏவுகணைகளை சோதிக்கும் இலக்குகள்தாம் என்பதை உறுதிப்படுத்திக் கூறுகின்றன.

ஒலியின் வேகத்தை விட ஐந்து முதல் இருபத்தியைந்து மடங்கு வேகமாக - செக்கனுக்கு சுமார் ஒன்று முதல் ஐந்து மைல் வேகத்தில் - பாய்ந்து சென்று தாக்கக்கூடியதிறன்கொண்டஏவுகணைகளை 'ஹைப்பர்சோனிக் பாலிஸ்டிக் ஏவுகணைகள்' என்கிறோம். இத்தகைய ரகத்தில் கப்பல்களை இலக்கு வைத்துத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளையே சீனா பரீட்சிப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த ஹைப்பர்சோனிக் கப்பல் எதிர்ப்பு பாலிஸ்டிக் ஏவுகணைகள் (ASBMs) போர்க்கப்பல்களுக்கு பாரிய அளவில் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளன என்று அமெரிக்க கடற்படை நிறுவனம் (USNI) தெரிவித்துள்ளது.

இந்த ரகத்தில் பல கப்பல் எதிர்ப்பு பாலிஸ்டிக் ஏவுகணைகளை சீனா உருவாக்கி வருவதாக அறியப்படுகிறது.

இதில், இரண்டு வகைகள், DF - 21-ம் மற்றும் DF - 26 நிலம் சார்ந்தவை.

மற்றொரு வகை, பெயர் தெரியவில்லை, H- 6 குண்டுவீச்சு விமானங்களினால் கொண்டு செல்லப்பட்டுப் பயன்படுத்தப்படுபவை.

ஏவுகணைகளை எதிர்கொண்டு தாக்கி அழிக்கும் திறன் கொண்ட கப்பல் தொகுதியில் சீனா பயன்படுத்தும் கட்டமைப்பு Type - 055 Renhai Class cruiser ஆகும். அதிலிருந்து, தற்போது YJ-21 என தற்காலிகமாக அடையாளம் காணப்பட்ட சிறிய ரக ஏவுகணையத் தாங்கிச் சென்று தாக்கும் முறைமையை சீனா சுவீகரித்து, அறிமுகப்படுத்தலாம் என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொலைதூர பாலைவனங்களில் வேறு இராணுவ நடவடிக்கைப் பயிற்சிகளை நடத்துவது போல போலியாக வெளியே காட்டிக்கொண்டு, எதிர்கால மோதல்களை சமாளிக்கும் தனது திறனை வளர்ப்பதற்காக, விமானத் தாங்கிக் கப்பல்களை இலக்கு வைக்கும் பயிற்சிகளை சீன மக்கள் விடுதலை இராணுவம் மேற்கொண்டு வருகின்றமையை இந்தப் புதிய இலக்குகள் பற்றிய தகவல்கள் அம்பலப்படுத்தியிருகின்றன.

மக்ஸர் தொழில்நுட்ப அமைப்பின் உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கூடுதல் விவரங்களுடன் அனைத்து மூல பகுப்பாய்வு (ASA) மூலம் கண்டறியப்பட்ட ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக இந்த புதிய இலக்குக்கள்



அமைந்திருக்கின்றமை கண்டுபிடிக்கப் பட்டது.

டேமியன் சைமன்ஸ், ஒரு சுயாதீன பாதுகாப்பு ஆய்வாளர். அவர் இதிலிருந்து தென்மேற்கே 190 மைல்கள் தொலைவில் இதேபோன்ற கடற்படைத் தளத்தை தாக்கும் இலக்காகக் கொண்டு பயிற்சி நடைபெறும் மற்றொரு மையத்தை முதலில் அடையாளம் கண்டு கொண்டிருந்தார். அந்த இடம் டிசம்பர் 2018 இல் கட்டப்பட்டது, ஆனால் இது வரை எவரின் கவனத்திலும் அது சிக்கவில்லை.

கப்பல் தளவமைப்பு அழிப்பான் போன்ற தளத்தைப் போலவே அது உள்ளது, மேலும் இது கப்பல் இலக்குகளையும் உள்ளடக்கியது, சமீபத்திய இலக்கின் ஒன்றும் அதே இடத்தில் உள்ளது. அதிநவீன இலக்குகளின் அறிகுறிகள் அங்கு இருப்பதாக டேமியன் சைமன் கூறுகிறார்.

இலக்குகளின் தளவமைப்பு மிகவும் கணக்கிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது, என்று அவர் கூறினார்.


நோக்குநிலைகள், வடிவங்கள் மற்றும் அளவுகள் பல இலக்குகள் முழுவதும் ஓரொழுங்கு முறையில் சீரானவை. இந்த பல்முனை தளங்களில் இடையூறு எதுவும் இல்லை என்று வெளித் தோற்றத்தை விவரிக்கின்றார் அவர்.

இலக்குகள் தரையில் உலோகத் தகடுகளை இடுவதன் மூலம் வடிவமைக்கப் பட்டுள்ளன. இது தூண்கள் மற்றும் கட்டடங்களுக்கு வேறுபட்ட பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று சைமன் மேலும் கூறுகிறார்.

இது வெப்பம் அல்லது ரேடாரை வித்தியாசமாகப் பிரதிபலிக்கக்கூடும், இது இந்த சோதனைகளுக்குப் பின்னால் உள்ள சிக்கலான அமைப்புகள் மற்றும் முயற்சியின் குறிப்பைக் கொடுக்கக் கூடும். - என்றார் அவர்.

சீன ஏவுகணைகள் தாம் தாக்கும் இலக்கின் படத்தை வடிவமைத்துக் கொள்ள அகச்சிவப்பு, ஒளியியல் அல்லது ரேடார் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். அவர்கள் இலக்கைச் சரியாகக் குறிவைத்துத் தாக்கக் கூடிய வகையில் நுணுக்கமான - நுண்ணிய - சிறிய அளவுகளில் தங்கள் பாதையை சரிசெய்து மாற்றக் கூடிய திறமையைப் பெற்றிருக்க முடியும்.

(மூலம் : எ.என்.ஐ.)



காலைக்கதிர் Kalaikkathir

# தனியார் வகுப்பு சென்ற மாணவி கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

## வவுனியாவில் பதற்றம்; பல கோணங்களில் விசாரணை







(கே.வசந்தரூபன், ந.லோகதயாளன்)

வவுனியாவில் தனியார் வகுப்புக்குச் சென்ற தரம் – 10 மாணவி கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தாய், தந்தையை இழந்த 15 வயதுடைய ராசேந்திரன் யதுசி என்ற மாணவி, மாமாவின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மதியம் தனியார் கல்வி நிலையம் சென்று மாலை 5.30 வரை வீடு திரும்பவில்லை. இதையடுத்து மாணவியைத் தேடிய உறவினர்கள் அவரைக் கண்டுபிடிக்க முடியாமையால் நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டுக்கு அமைவாக நெளுக்குளம் பொலிஸார் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் துணையுடன் மாணவியைத் தேடும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது அப்பகுதியில் உள்ள மக்கள் நடமாட்டம் அற்ற பகுதியிலுள்ள கிணற்றில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் மாணவி சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

உறவினர்களால் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தடவியல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து அப்பகுதியில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கிணற்றிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மரத்தின் கீழ்ப் பகுதியில் மாணவியின் காலணி மற்றும் புத்தகங்கள் மீட்கப்பட்டதுடன் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மோப்ப நாய் கிணறு அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள காணியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் தஞ்சம் அடைந்திருந்தது. குறித்த பாவனையற்ற வர்த்தக நிலையத்தில் மதுபானப் போத்தல்கள் மற்றும் கயிறும் காணப்பட்டன.

அதன்பின்னர் குறித்த வர்த்தக நிலையத்தின் வீட்டாரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இரவு 11.45 மணியளவில் கிணற்றில் காணப்பட்ட மாணவியின் சடலத்தை மீட்டெடுக்கும் பணியில் தடவியல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடு பட்டனர். அவர்கள் பொதுமக்களின் உதவியுடன் மாணவியின் சடலத்தை கிணற்றிலிருந்து மேலே எடுத்து வந்தனர்.

குறித்த பகுதியில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டமையால் அவ்விடத்தில் சற்றுப் பதற்ற நிலைமை காணப்பட்டது.

சடலம் பிரதே பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மாணவியின் பிரேத பரிசோதனைகளின் பின்னரே மரணத்துக்கான காரணம் தொடர்பில் தெரிவிக்க முடியும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸாருடன் இணைந்து தடவியல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### ஓரிரு தினங்களுக்கு ரவீந்திரனின் கட்டுரை பிரசுரமாகாது

காலைக்கதிர் காலை இதழில் 'புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்' என்ற தலைப்பில் ஆஸ்திரேலியாவிலிருந்து தொடர் கட்டுரை வரையும் சிரேஷ்ட சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன் தற்போது வெளியூர்பயணத்தில்இருக்கின்றமையால் நேற்று முதல் ஓரிரு தினங்களுக்கு அவரது கட்டுரை காலை இதழில் இடம்பெறாது. பெரும்பாலும் சனிக்கிழமை முதல் அது தொடர்ந்து வழமை போல பிரசுரமாகும். (ஆ -ர்)

### வரி உயர்வு பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

15 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது என பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இந்த வரித் திருத்தங்கள மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெறுமதி சேர் வரி நாடாளுமன்றத்தின் தழுவல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதன்மூலம்நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

தொலைத்தொடர்பு வரியை சட்டத் திருத்தத்திற்கு உட்பட்டு, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் கடிதம் வெளியிடுவதன் ஊடாக நடைமுறைப் படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தனிநபர் வருமான வரிச் சலுகைக்கான் மட்டத்தை வருடாந்த வருமானம் முப்பது லட்சம் ரூபாவில் இருந்து 18 லட்சம் ரூபா வரை குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதாவது இனி மாதாந்தம் ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு அதிகமான வருமானத்தைப் பெறுவோர் வருமான வரி கட்ட வேண்டியிருக்கும். முன்னர் மாதாந்தம் இரண்டரை லட்சம் ரூபாவுக்கு அதிகமான வருமானத்தைப் பெறுவோரே வருமான வரி செலுத்த வேண்டியிருந்தது.

இந்த வரி அதிகரிப்பினால் பொருள்களின் விலைகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் மேலும் எகிறும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருவதாகக் கூறி உரிமையாளர் கடையின் உள்ளே சென்றுள்ளார்.

இதன்போது மேசையில் இருந்த தட்டில் காணப்பட்ட அத்தனை மோதிரங்களையும் தூக்கி கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்.

கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது 9 பவுண் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நேற்று முன் தினமும் கஸ்தூரியார்வீதியில்உள்ளநகைக்கடைக்குச் சென்ற பெண்கள் காப்புக் கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்த சமயம் கடை உரிமையாளர்கள் அசந்த நேரம் 5 காப்புகளைத் தூக்கிகொண்டு தப்பி ஓடியுள்ளனர். கடை பணியாளர்கள் நாலா புறமும் தேடியபோதும் களவாடியோடிய பெண்களைப் பிடிக்க முடியவில்லை.

இரண்டு சம்பவங்களும் கடைகளின் சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### மஹிந்தவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'அந்தக் கடினமான தீர்மானத்தை நாட்டுக்காகவே நான் எடுத்தேன். நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டே எடுத்தேன். தேவையான மறுசீரமைப்புகளை முன்னெடுப்பதற்கு நான் தயார்' என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். என்னுடைய விருப்பத்தின் பேரிலேயே, அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட விருகிறது.

ரணில்விக்கிரமசிங்கவைப்பிரதமராக நியமித்தமை அவர் மீதிருந்த நம்பிக்கையில் ஆகும் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்த நம்பிக்கையின் அடிப்படையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### முதியவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராசபாதையில் இருந்த வீடு நோக்கிப் பயணித்தவரிடமே நேற்று மாலை 6 மணியளவில் இவ்வாறு பாண் பறிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடுமையான வறுமை நிலவுவது உண்மை என்றாலும் மோட்டார் சைக்கிளில் வருவதற்கு பெற்றோலுக்கு உள்ள பணம் இரண்டு இறாத்தல் பாண் வாங்குவதற்கு இல்லையா எனக் கேள்வி எழுப்பிய அந்த முதியவர், அதனை தன்னிடம் கேட்டிருந்தால் தாம் ஒரு நாள் பட்டினி கிடந்தாயினும் அதனை வழங்கியிருப்பேன் என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622